செ.வெ.எண்.43 நாள்.17.11.2017.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், நம்பியாறு நீர்த் தேக்கத்திலிருந்து மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பிசான சாகுபடிக்காக தண்ணீரினை திறந்து வைத்தார்.**

--------

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், நம்பியாறு நீர்த் தேக்கத்திலிருந்து பிசான சாகுபடிக்காக தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி இன்று (17.11.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பிசான சாகுபடிக்கு தண்ணீரினை திறந்து வைத்தார்.

பின்னர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

நம்பியாறு நீர்தேக்கத்தின் மூலம் கோட்டைக்கருங்குளம், உறுமன்குளம், ரமதாபுரம், கரைச்சுத்துபுதூர், கஸ்தூரிரெங்கபுரம், குமாரபுரம், முதுமொத்தான்மொழி, திசையன்விளை ஆகிய 8 கிராமங்களை சேர்ந்த 40 குளங்கள் பயன்பெறுகின்றன. இராதாபுரம் வட்டம், நம்பியாறு நீர்தேக்கத்தின் நேரடி பாசனத்தில் (புதிய பாசன பரப்பு) 375.29 ஏக்கரும், மறைமுக பாசனத்தில் கோட்டைக்கருங்குளம், துத்திகுளம், கன்னகங்குளம், புதுக்குறிச்சிகுளம், ஆய்முடிகுளம், கொல்வாய்குளம், பாலாத்திகுளம், பாப்பான்குளம், குட்டிநாகன்குளம், பெருங்கண்ணன்குளம், சித்தாலன்குளம், பெரியாலன்குளம், கைலாசப்பேரிகுளம், பொன்னாத்திகுளம், நம்பிக்குறிச்சிகுளம், பூதனேரிகுளம், தருவைக்குளம், செந்திலான்பண்ணைகுளம், பசுவிழிகுளம், பெட்டைக்குளம், நந்தன்குளம், எருமைக்குளம், அவக்காய்குளம், குமாரபுரம்குளம், வண்ணாண்குளம், பிள்ளையார்குளம், அப்புவிளைக்குளம், கீழப்படுகைகுளம், ஸ்ரீகிருஷ்ணபேரிகுளம், தினகரன்குளம், இஸ்லாபுரம்குளம், ரம்மாதாபுரம்குளம், புளிமான்குளம், தத்துவனேரிகுளம், பீலிக்குளம், புலிக்குளம், பெருங்குளம், சிறுகுளம், உறுமன்குளம், விளிமான்குளம் ஆகிய 40 குளங்கள் வாயிலாக 1369.26 ஆக மொத்தம் 1744.55 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். நீர் தேக்கத்திலிருந்து (இன்று) 17.11.2017 முதல் 31.03.2018 வரை நாள் ஒன்றுக்கு வலது மதகு மூலம் 15 கன அடி வீதமும் மற்றும் இடகு மதகு மூலம் 15 கன அடி வீதமும் மொத்தம் வினாடிக்கு 30 கன அடிக்கு மிகாமல் 2017–2018ம் ஆண்டு பிசான சாகுபடிக்கு நீர் இருப்பை பொறுத்து தண்ணீர் திறந்து விடப்படும். எதிர்வரும் நாட்களில் வடகிழக்கு பருவ மழையினால் அணையில் நீர்வரத்து அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் நாட்களில் பருவ மழை பொய்த்து எதிர்பார்க்கின்ற நீர்வரத்து கிடைக்க பெறவில்லை என்றால் இருக்கும் நீரினை அனுமதிக்கப்பட்ட பாசன நிலங்கள் முழுமைக்கும் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில் வழங்கப்படும். எனவே, விவசாயிகள், பொதுமக்கள் நீரினை சிக்கனமாகவும், நீர் விநியோகப் பணியில் பொதுப்பணித் துறையினருக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.ஜெயபாலன், உதவி செயற்பொறியாளர் திரு.மதன சுதாகரன், உதவி பொறியாளர்கள் திரு.மூர்த்தி, திரு.பாஸ்கர்,முக்கிய பிரமுகர்கள் திரு.சுப்பையாபாண்டியன், திரு.அந்தோணி அமல்ராஜா, திரு.ஏ.கே.சீனிவாசன், திரு.அழகானந்தம், திரு.இ.நடராஜன், திரு.சுடலைமணி, திரு.கபேரியல் ராஜன், திரு.ரஞ்சித் சிங், திரு.அருள்புனிதன், திரு.ஆறுமுகம், திரு.தவசிமுத்து மற்றும் விவசாயிகள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி